னி மதிவட்டம் பொன்மையாங், கன்றிய ரேகை கலந்திடுஞ்
செம்மையில், லொன்றிய வம்மை யெழுத்தவை பச்சையே. (௪௭)

ஏய்ந்த மரவுரி தன்னி லெழுதிய, வாய்ந்தவிப் பெண்ணெ
ண்பத் தொன்றில் நிரைத்தபின், காய்ந்தவி நெய்யுட் கலக்
குட ஞெமழும், மாக்கலத் தேழுமி ரசூதி பண்ணுமே. (௪௮)

பண்ணிய பொன்னைப் பரப்பற நீபிடி, யெண்ணிய காட்

களி யின்பமு மெய்திடு, நண்ணிய காமமு நான்முக னொத்தீ
பின், றுண்ணென நேயநற் சேர்க்கலு மாகுமே, (சகூ)

ஆகின்ற சந்தனங் குங்குமங் கத்தூரி, போகின்ற சாந்து
சவாது புழுகுநெ, யாகின்ற கற்பூர மாகோ சனைருஞ், சேர்
கின்ற வொன்பதுஞ் சேரநீ வைத்திடே. (ரு0)

வைத்திடும் பொன்னுடனே மாதவ நோக்கிடிற், கைச்சிறு
கொங்கை கலந்தெழு கன்னிகைத, தச்சிறு வாகச் சமைந்த
விம் மந்திர, மர்ச்சனை யாயிர மாயிரஞ் சிந்தியே. (ருக)

சிந்தையி னுள்ளே திகழ்தரு சோதியா, வெந்தை கரங்க
ளிருமூன்று முள்ளது, பந்தமா சூலம் படைபாசம் வில்லம்பு,
முந்தகி லீரெழு முன்னிரு தாளே (ருஉ)

இருந்தனர் சத்திக ளறுபத்து நால்வ, ரிருந்தனர் கன்னிக
ளெண்வகை யெண்ம, ரிருந்தனர் சூழ வெதிராசக கரத்தே, யி
ருந்த கரமிரு வில்லம்பு கொண்டே (ருங)

கொண்ட கனகங் குழைமுடி யாடையாய்க், கண்டவிம்
முத்தங் கனல்திரு மேனியாயப, பண்டமர் சோதிப் படிக
மானவ, ருண்டங் கொருத்தி யுணரவல் லார்க்கே (ருச)

உணர்ந்திருந் துள்ளே யொருத்தியை நோக்கிற், கலந்திருந்
தெங்குங் கருணை பொழியு, மணந்தெழு மோனை யொளியது
காணுங், தணந்தெழு சக்கரந் தானதரு வாளே (ருரு)

தருவழி யாகிய தத்துவ ஞானங், குருவழி யாகுங் குண
ங்களு ளின்று, கருவழி யாகுங் கணக்கை யறுத்துப், பெருவ
ழி யாக்கும் பேரொளி தானே (ருசு)

பேரொளி யாய பெரிய பெருஞ்சுடர், சீரொளி யாகித்
திகழ்தரு நாயகி, காரொளி யாகிய கன்னிகை பொன்னிறம்,
பரொளி யாகப் பரந்துநின் றாளே. (ருஎ)

பரந்த கரமிரு பங்கய மேந்திக், குவிந்த கரமிரு கொய்த

ளிர்ப்பாணி, பரிந்தருள் கொங்கைகள் முத்தார் பவள, மிரு
ந்தநல் லாடை மணிபொருந் தனதே. (ருஅ)

மணிமுடி பாதஞ் சிலம்பணி மங்கை, பணிபவ ளன்றி யரு
ளில்லை யாகுக, தணிபவர் நெஞ்சினுட் டனரு ளாகிப், பணிப
வாக கன்றே பரகதி யாமே. (ருகூ)

பரந்திருந் துள்ளே யறுபது சந்தி, கரந்தன கன்னிக ளாப்
படி சூழ, மலர்ந்திரு கையின மலரவை யேந்திச, சிறந்தவ ரே
நந்துஞ் சிரீம்தன மாமே. (சுo)

தனமது வாகிய தையலை நோக்கி, மனமது வோடி மரிக்
கிலா ராணடிற், கனமிவை யறுக கருதிய நெஞ்சம, தினகர
ருரிட செய்திய தாமே (சுக)

ஆகின்ற மூலத் தெழுந்த முழுமலா, போகின்ற பேரொ
ளி யாய மலர்ந்ததாய், போகின்ற பூரண மாக நிறைந்தபின,
சேர்கின்ற செந்தழன் மண்டல மானதே. (சுஉ)

ஆகின்ற மணடலத துள்ளே யமர்ந்தவ, ளாகின்ற வைமப
த் தறுவகை யானவ, ளாகின்ற வைமபத தறுசததி நோக்கு,
வாகின்ற வைமபத் தறுவகை சூழவே (சுங)

சூழ்ந்தெழு சோதி சுடாமுடி பாதமா, யாங்கணி முத்த
மழகிய மேனியுங், தாங்கிய கையவை தாகினி ஞானமா, யேந்
து கரங்க ளொடுத்தமா பாசமே. (சுச)

பாசம தாகிய வேரை யறுத்திட்டு, நேசம தாக நினைத்தி
ரு முழமுளே, காசம தெல்லா கடந்திடு மையாண்டிற், சாகிவி
மேலமர் கண்ணுக லாகுமே. (சுரு)

கண்ணுடை நாயகி தன்னரு ளாம்வழி, பண்ணுறு நாதம்
பகையற நின்றிடில், விண்ணமர் சோதி விளங்க ஹிரீங்கார,
மண்ணுடை நாயகி மண்டல மாகுமே. (சுசு)

மண்டலத் துள்ளே மலர்ந்தெழு தீபத்தைக், கண்டகத

துள்ளே கருதி யிருந்திடும், விட்டகத் துள்ளே விளங்கி வருத
லாறு, நடகத் துள்ளவை தாரகை யுமாமே. (௬௭)

தாங்கிய நாபித் தடமலர் மண்டலந், தோங்கி யெழுங்க
லைகுள் ளுணர் வானவ, ளோங்க வரும்பிறப் பெண்ணி யறுத்
திட, வாங்கிய நாதம் வலியுட னாகுமே. (௬௮)

நாவுக்கு நாயகி நன்மணி பூணாரம், பூவுக்கு நாயகி பொ
ன்முடி யாடையாம், பாவுக்கு நாயகி பாலொத்த வண்ணத்தா,
ளாவுக்கு நாயகி யங்கமர்ந் தாளே (௬௯)

அன்றிரு கையி லளந்த பொருண்முறை, யின்றிரு கையி
லெடுத்தவெண் குண்டிகை, மன்றது காணும் வழியது வாசலே,
கண்டங் கிருந்தவா காரணி காணுமே (௭௦)

காரணி சத்திக ளைம்பத் திரண்டெனக், காரணி கன்னிக
ளைம்பது மிருவராய்க், காரணி சக்கரத் துள்ளே கரந்தெங்கும்,
காரணி தன்னரு ளாகிநின் றாளே (௭௧)

நின்றவிச் சத்தி நிலைபெற நின்றிடிற், கண்டவிவ் வன்னி
கலந்திடு மோராண்டிற், கொண்ட விரதநீர் குன்றும் வின்றி
டின், மன்றினி லாடு மணியது காணுமே. (௭௨)

கண்டவிச் சத்தி யிருதய பங்கயங், கொண்டவித் தத்து
வ நாயகி யானவள், பண்டையவ் வாயுப் பகையை யறுத்திட,
விண்டென மனத்து ளினிதிருந் தாளே. (௭௩)

இருந்தவிச் சத்தி யிருநாலு கையிற், பரந்தவிப் பூங்கிளி
பாச மழுவாள், கரந்திடு கேடகம் வில்லம்பு கொண்டங், குர
ந்தங் கிருந்தவள் கூத்துகந் தாளே. (௭௪)

உகந்தனள் பொன்முடி முத்தார மாகப், பரந்த பவள
மும் பட்டாடை சாத்தி, மலர்ந்தெழு கொங்கை மணிக்கச்ச
ணிந்து, நிறைந்தங் கிருந்தவ டான்பச்சை யாமே. (௭௫)

பச்சை யிவளுக்குப் புகன்மை யாறெட்டு, கொச்சைய

ரெண்மர்கள் கூடி வருதலார், கச்சணி கொங்கைகள் கையிரு காப்பதாம், பெச்ச விடைச்சி யிவளிருந் தாளே. (எசு)

தாளதி னுள்ளே தாங்கிய சோதியைக், காலது வாகக் கலந்துகொள் ளென்று, மாலது வாக வழிபாடு செய்துநீ, பாலது போலப் பரந்தெழு விண்ணிலே. (எஎ)

விண்ணமர் நாபி யிருதய மாங்கிடைக், கண்ணமர் கூபங் கலந்து வருதலால், பண்ணமர் தாதிதத மண்டல மானது, தண்ணமர் கூபந் தழைத்தது காணுமே. (எஅ)

கூபத்துச் சத்தி குளிர்முக மத்தும், தாபத்துச் சத்தித் தயங்கி வருதலா, லாபத்துக் கைக்கண் டதனை நாலைந்து, பாச மறுக்கப் பரந்தன சூலமே (எகூ)

சூலந்தண் டொள்வாள் சுடர்பறை ஞானமாய், வேலம்பு தமருக மாகிளி விற்கொண்டு, காலம்பூ பாச மழுகத்தி கைக்கொண்டு, கோலஞ்சேர் சங்கு குவிந்தகை பெண்ணதே. (அ0)

எண்ணமர் சத்திக ளைம்பத்து நாலு—மெண்ணமர் சத்திக ளைம்பத்து நாலவர், மெய்ந்நிறை பூவிக முளையா யிருந்தவ, ரெண்ணிய பெண்ணாய் கடந்துநின் றாளே (அக)

கடந்தவள் பொன்முடி மாணிக்கத் தோடு, தொடர்ந்தணி முத்து பவளங் கச்சாகப், படர்ந்தல்குற் பட்டாடை பாதச் சிலம்பு, மடந்தை சிறியவள் வந்துநின் றாளே (அஉ)

நின்றவிச் சத்தி நிரந்தர மாகவே, கண்டிடு மேரு வணிமா திகளாகிப், பண்டைய வாயின பகட்டை யறுத்திட, வெண்டிய தீப முணர்ந்தார்க ளுண்டாமே, (அங)

உண்டோ ரதோமுக முத்தம மானது, கண்டவிச் சத்தி சதாசிவ நாயகி, கொண்ட முகமைந்து கூறுங் கரங்களி, லொன்றிரண் டாகவே மூன்றுநா லானதே (அச)

நவமணி சூலங் கபாலங் கிளியுடன், பன்மணி நாக மழு கத்தி பந்தாகுங், கன்மணி தாமரைக் கையிற் றமருகம், பொன்மணி பூணாரம் பூசனை யானதே. (௮௫)

பூசனை சத்திக ளெண்ணைவர் சூழவே, நேசவள் கன்னிக ளாற்பத்து நேரதாய்க், காசினி சக்கரத் துள்ளே கலந்தவள், மாசடை யாமன மகிழ்ந்திருந் தாளே. (௮௬)

தாரத்தி னுள்ளே தயங்கிய சோதியைப், பாரத்தி னுள்ளே பரந்து ளெழுந்திட, வேரது வொன்றினை றெண்ணு மதே மயங், காரது போலக் கலந்தெழு மண்ணிலே (௮௭)

மண்ணி லெழுந்த அகார உகாரங்கள், விண்ணி லெழுந்து சிவாய நமவென்று, கண்ணி லெழுந்தது காண்பரி தன்று கொல், கண்ணி லெழுந்தது காட்சி தரவென்றே. (௮௮)

என்றங் கிருந்த வமுத கலையிடைச், சென்றங் கிருந்த வமுத பயோதரி, கண்டங் கரமிரு வெளிபொன மண்டை, கொண்டங் கிருந்தது வண்ண மமுதே (௮௯)

அமுதம தாக வழங்கிய மேனி, படிகம தாகப் பரந்தெழு முளளே, குமுதம தாகக் குளிர்ந்தெழு முத்து, கெழுதம தாகிய கேடிலி தானே. (௯௦)

கேடிலி சத்திகண் முப்பத் தறுவரு, நாடிலி கன்னிக ளைலொன பதினமரும், பூவிலி பூவித முள்ளே யிருந்திவர், நாளிலி தன்னை நணுகினை ரர்களே. (௯௧)

நின்றது புந்தி நிறைந்திடும் வள்ளியுங், கண்டது சோதி கருத்து ளிருந்திடக், கொண்டது வோராண்டு கூடி யருளைக்கு, விண்ட வெள்காரம் விளங்கிய வன்றே. (௯௨)

விளங்கிடு வானிடை நின்றவை யெல்லாம், வணங்கிடு மண்டல மன்னுயி ராக, வலங்கொள் கனகமக் குழாண னெருக்குச, சனக்கிடை நின்றிவை சொல்வது மாமே. (௯௩)

ஆமே யதோமுக மேலே யமுதமாய்த், தாமே யுகாரந் த
ழைத்தெழுஞ் சோமனுங், காமேல் வருகின்ற கற்பக மானது,
பூமேல் வருகின்ற பொற்கொடி யானதே (௯௪)

பொற்கொடி யாளுடைப் பூசனை செய்திட, வக்களி யா
கிய வாங்காரம் போயிடு, மற்கட மாகிய மண்டலந் தன்னுளே
விற்கொடி யாகிய பேதையைக் காணுமே. (௯௫)

பேதை யவளுக்குப் பெண்மை யழகாகுந், தாதை யிவளு
க்குத் தாணுவு மாயிற்று, மாதை யவளுக்கு மன்னுந் திலத
மாய்க், கோதையர் சூழக் குவிந்திடக் காணுமே (௯௬)

குவிந்தன சத்திகண் முப்பத் திருவர், நடந்தனர் கன்னிக
ளொண்மர் சூழப், பரந்திதழாகிய பங்கயத் துள்ளே, யிரு
ந்தனள் காணு மிடம்பல கொண்டே (௯௭)

கொண்டன ளிருந்தனள் கூத்த னொளியினைக், கண்டங் கி
ருந்தனர் காரணத் துள்ளது, பண்டை மறைகள் பரந்தெங்குந்
தேடுமா, வின்றென் மனத்துளே யில்லடைந் தாளுமே (௯௮)

இல்லடைந் தானுக்கு மில்லாத தொன்றில்லை, யில்லடை
ந் தானுக் கிரப்பது தானில்லை, யில்லடைந் தானுக் கிமையவ
ரொவ்வா, ரில்லடைந் தானுக்கு மில்லாதில் லானையே ()

ஆனை மயக்கு மறுபத்து நாற்றறி, யானை யிருக்கு மறுப
த்து நாலொளி, யானை யிருக்கு மறுபத்து நாலறை, யானையுங்
கோடு மறுபத்து நாலிலே. (௧00)

ஆ அதிகாரம் - ௧௬௫-திருமந்திரம்-௫௯௫.

காலாங்கத்திரம் முற்றும்.

ஆ சிறப்புப்பாயிரமுட்பட - அதிகாரம்-௯௰.

௬௪-திருமந்திரம்-௧௪௪௮

ஐந்தாந் தந்திரம்.

சுத்தசைவம்

ஊரு முலகமு மொருங்கப் படைக்கின்ற, பேரறி வாளன் பெருமை குறித்திடின், மேருவு மூவுல காளி யிலங்கெழுந், தாரணி நால்வகைச் சைவமு மாமே (க)

சத்து மசத்துஞ் சதசத்துந் தான்கண்டு, சித்து மசித்துஞ் சேர்வுறா மேநீத்த, சுத்த மசுத்தமுந் தோய்வுறா மேநின்று, நித்தம் பரஞ்சுத்த சைவர்க்கு நேயமே (உ)

கற்பனை கற்றுக் கலைமன்னு மெய்யோக, முற்பத ஞான முறைமுறை நண்ணியே, சொற்பத மேவித் துரிசற்று மேலான, தற்பரங் கண்டுளோர் சைவசித் தாந்தரே. (௩)

வேதாந்தஞ் சுத்தம் விளங்கிய சித்தாந்த, நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற காட்சியர், பூதாந்த போதாந்த மாகப் புனஞ்செய்ய, நாதாந்த பூரணர் ஞானநே யத்தரே (௪)

அசுத்தசைவம்.

இணையார் திருவடி யேத்துஞ் சீரங்கத், திணையா ரிணைக்குழை யீரணை முத்திரை, குணமா ரிணைகண்ட மாலையுங் குன்று, திணைவாகுஞ் சரியை கிரியையி னார்க்கே. (க)

காதுப்பொ னார்ந்த கடுக்க னிரண்டுசேர்த், தோதுந் திருமேனி யுட்கட் டிரண்டுடன், சோதனை செய்து வுபதேச மார்க்கரா, யோதி யிருப்பா ரொருசைவ ராகுமே. (உ)

கண்டங்க ளொன்பதுங் கண்டவர் கண்டனர், கண்டங்க ளொன்பதுங் கண்டா ரரும்பொருள், கண்டங்க ளொன்பதுங் கண்டவர் கண்டமாங், கண்டங்கள் கண்டோர் கசிந்தசுத்த சைவரே. (௩)

ஞானி புவியெழு வன்னூ லனைத்தையுஞ், மோன திசையு முழுவெண்ணெண் சித்தியு, மேனி விளங்கு மெழுகாரி யாரையீறுங், கோனொடு தன்னையுங் காணுங் குணத்தனே (ச) ஆ. அ.

மார்க்கசைவம்.

பொன்னாற் சிவசாதனம்பூதி சாதந, நன்மார்க்க சாதந மாஞான சாதநந், துன்மார்க்க சாதநந் தோன்றாத சாதநஞ், சன்மார்க்க சாதந மாஞ்சுத்த சைவர்க்கே (க)

கேடறு ஞானி கிளைஞான பூபதி, பாடறு வேதாந்த சித்தாந்த பாகத்தி, னூடுறு ஞானோ தயனுண்மை முத்திபோய், பாடுறு சுத்தசை வப்பத்த நித்தனே (உ)

ஆகம மோனபா னநிலான நாலேழு, மோகமி ருவேழு முப்பேத முற்றுடன், வேதமிவ் வேதாந்த சித்தாந்த மெய்மையொன், றாக முடிந்த வருஞ்சுத்த சைவமே. (ங)

சுத்த மசுத்தந் துரியங்க ளோரேழுஞ், சுத்த மசுத்தந் தணந்த பராபரை, யுத்த பராபரை யுள்ளாம் பராபரை, யத்த னருட்சத்தி யாயெங்கு மாமே. (ச)

சுத்து மசத்துந் தணந்தவர் தானாகிச், சித்த மசித்துந் தெரியாச் சிவோகமாய், முத்தியு ளானந்த சத்தியுள் மூழ்கினோர், சித்தியு மங்கே சிறந்துள தானே. (ரு)

தன்னைப் பரனைச் சதாசிவ னென்கின்ற, மன்னைப் பதிபசு பாசத்தை மாசற்ற, முன்னைப் பழமல முன்கட்டை வீட்டினை, யுன்னத் தருஞ்சுத்த சைவ ருபாயமே. (சா)

பூரணன் றன்னிலே வைத்தற்ற வப்போத, மாரண மந்த மதித்தானந் தத்தோடி, னேரென வீராறு நீதி நெறிமோகங், காரண மாஞ்சுத்த சைவர்க்குக் காட்சியே. (எ)

மாருத ஞான மதிப்பற மாயோகச், சேருஞ் சித்தையை

த் தேற்றிச் சிவமாக்கிப், பேரான பாவனை பேணி நெறிநிற்றல், கூறுஞ் ஞானி சரிதை குறிக்கிலே. (அ)

வேதாந்தங் கண்டோர் பிரமவித் தியாதரர், நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற யோகிகள், வேதாந்த மில்லாத சித்தாந்தங் கண்டுளோர், சாதாரண மன்ன சைவ ரூபாயமே. (௯)

விண்ணினைச் சென்றணு காவியன் மேகங்கள், கண்ணினைச் சென்றணு காப்பல காட்சிக, ளெண்ணினைச் சென்றணு காம லெனப்படு, மண்ணலைச் சென்றணு காப்பசு பாசமே. ()

ஒன்று மிரண்டு மிலதுமா யொன்றாக, நின்று சமய நிராகார நீங்கியே, நின்று பராபரை நேயத்தைப் பாதத்தாற், சென்று சிவமாதல் சித்தாந்த சித்தியே. (௧௧) ஆ ௧௧

கடுஞ்சுத்தசைவம்.

வேடங் கடந்து விகிர்தன்றன் பான்மேவி, யாடம் பரமின்றி யாசாபா சஞ்செற்று, பாடொன்று பாசம பசுத்துவம் பாழ்படச், சாடுஞ் சிவபோ தகர்சுத்த சைவரே. (௧)

உடலான வைந்தையு மோரா றைந்து, மடலான மாமாயை மற்றுள்ள நீவப், படலான கேவல பாசந் துடைத்துத், திடமாய்த் தனியுறல் சித்தாந்த மார்க்கமே. (௨)

சுத்தச் சிவனுரை தானதிற் றேயாமல், முத்தர் பதப்பொருண் முத்திவித் தாமூல, மத்தனை யானமா வரனையடைந் தற்றும், சுத்தச் சிவமாவ ரேசுத்த சைவரே. (௩)

நானென்றுந் தானென்று நாடினான் சாரவே, தானென்று நானென் றிரண்டிலாத் தற்பதந், தானென்று நானென்ற தத்துவ நல்கலாற், றானென்று நானென்றுஞ் சாற்றகி லேனே. (௪)

சாற்றரி தாகிய தத்துவஞ் சித்தித்தா, லூற்றரி தாகிய

வைந்து மடங்கிடு, மேற்றிகழ் ஞானம் விளக்கொளி யாய்நிற் கும், பாற்பர சாயுச்சிய மாகும் பதியே. (ரு) ஆ. உ௯.

சரிகை.

நேர்ந்திடு மூல சரிகை நெறியிதென, றூட்நதிடுங் காலங் கி கருசு மலையமா,ஞொநதிடுங் கந்தரு கேணமினகள பூதலத, தோர்நதிடுஞ் சுதத சைவத்துக குயிரதே, (க)

உயிர்க்குயி ராயநிற்ற லொணஞான பூசை, யுயிர்கொளி நோக்கின் மகாயோக பூசை, யுயிர்ப்பெறு மாவா கனமபுறப் பூசை, செயிற்கடை நேசஞ் சிவபூசை யாமே. (உ)

காடு நகரமு நற்றிருக கோயிலுந, கேடித் திரிந்து சிவ பெரு மானென்று, பாடுமின் பாடிப் பணிமின பணிந்தபின், கூடிய நெஞ்சத்துக கோயிலாய்க கொள்வனே. (ங)

பத்தர் சரிகை படுவோர் கிரியையோர், ரதநகு தொண் டருளவேடத் தாகுவோர், சுதத வியமாகி சாதகர் துயோ கர், சித்தர் சிவஞானஞ் சென்றெய்து வோர்களே (ச)

சார்ந்தமெய்ஞ் ஞானத்தோர் தானவ ருயினோர், சேர் ந்தவெண் யோகத்தா சித்தர் சமாதியோ, ராய்ந்த கிரியை யோ ரர்ச்சனை தபயாதோர், நோகந சரிகையோர் நீணிலத் தோரே. (ரு)

கிரியை யோகங்கள் கிளர்ஞான பூசை, யரிய சிவனுரு வ மரு மருபக், தெரியும் பருவத்துத் நேர்ந்திடும் பூசை, யுரியன் நேயத் துயர்பூசை யாமே, (சு)

சரிதாதி நான்குந் தருஞான நான்கும், விரிவான வேதாந் த சித்தாந்த மாறும், பொருளானது நந்தி பொன்னகர் போ ந்து, மருளாரு மாந்தர் வணக்கலைத் தானே (எ)

சமையமும் பலகந்திக் தந்தெய்த லைந்துரை மூலமும் பிசே

டமு மரன்மந் திரதந்தி, சமைய நிருவாணங் கலாசுத்தி யா
கு, மமைமன்று ஞான மார்க்க முபதேசமே. (அ) ஆக ௬௨.

கிரியை.

பத்துத் திசையும் பரமொரு தெய்வமுண், டெத்திக் கில
ரில்லை யெனப்பதி னைமலர்க், கொத்துத திருவடி நீழற் சரணெ
னத், தத்தும வினைகடல் சாராது காணுமே. (௧)

காணுறு கோடி கடிகமழ் சந்தனம், வாணுறு மாமல ரிட்
டு வணங்கினு, மூவினை நீங்கி யுணர்பவர்க் கல்லது, தேனமர் பூ
ங்குழல் சேரவொண் ணாதே. (௨)

கோனக்கன லாகிய குரைகழ லேத்துமின், ஞானக்கன
ாகிய நடுவே யுழிதரும், வானக்கன ாகிய வானவர் கைதொ
ழு, மானக்கன் நீசனருளவள மாமே. (௩)

இதுபணிந் தெண்டிசை மண்டல மெல்லா, மதுபணி செ
ய்கின் றவனொரு கூற, விதுபணி மானுடர் செய்பணி யீசன,
பதிபணி செய்வது பத்திமை காணே. (௪)

பத்தன் கிரியை சரியை பயில்வுற்றுச், சுத்த வருளாற் று
ரீசற்ற போகத்தி, லுய்த்த நெறியுற் றுணர்கின்ற ஞானத்தா
ற், சித்தங் குருவருளாற் சிவ மாகுமே (௫)

அன்பின் னுருகுவ னாளும் பணிசெய்வன், செம்பொ
ன் செய்மேனி கமலத் திருவடி, முன்புநின் றாங்கே மொ
ழிவ தெனக்கரு, ளென்பினுட் சோதி யிலங்குகின் றானே. (௬)

ஆக ௬அ.

யோகம்.

நெறிவழி யேசென்று நேர்மையு ளொன்றித், தறியிருந்
தாற்போலத் தம்மை யிருத்திச், சொறியினுந் தாக்கினுந் து
ண்ணென் றுணரார்க், குறியறி வாளர்க்குக் கூடலு மாமே. ()

ஊழிதோ றூழி யுணர்ந்தவர்க் கல்லது, ஊழிதோ றூழி யுணரவுந் தானொட்டா, னூழி யமரு மரியய னென்றுளார், சூழி முயன்றுமொ ருச்சியு ளானே (௨)

பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோற், சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது, ஓவியம் போல வுணர்ந்தறி வாளர்க்கு, நாவி யணைந்த நடுத்தறி யாமே (௩)

உய்ந்தன மென்னீ ருறுபொருள் காண்கிலீர், கந்த மலரிற் கரக்கின்ற நந்தியைச், சிந்தை யுறவே தெளிந்திரு ளீங்கினால், முந்தப் பிறவிக்கு மூலவித் தாகுமே. (௪)

எழுத்தொடு பாடலு மெண்ணெண் கலையும், பழுத்தலைப் பாசப் பிறவியு நீங்கா, வழுத்தலைச் சோமனோ டங்கி யருக்கன், வழுத்தலை செய்யும் வகை யுணர்ந் தேனே (௫)

விரும்பிநின் றேசெய்யிற் மெய்த்தவ ராகும், விரும்பிநின் றேசெய்யின் மெய்யுரை யாகும், விரும்பிநின் றேசெய்யின் மெய்த்தவ மாகும், விரும்பிநின் றேசெய்யின் விண்ணவ னாகுமே ()

பேணிற் பிறவா வுலகருள் செய்திடும், காணிற் றனது கலவியு ளேநிற்கும், நாணி னரக நெறிக்கே வழிசெய்யு, மூனிற் சுழி மங்கி யுந்தமன் றானே (௭)

ஒத்தசெங் கோலா ருவப்பிலி யாதவ, ரெத்தனை யாயிரம் வீழ்ந்தவ ரெண்ணிலி, சித்தர்கள் தேவர்கள் மூவர் பெருமையா மத்த னிவனென்றே யன்புறு வார்களே (௮)

யோகிக்கு யோகாதி மூன்றுள கொண்டிற்றோ, ராகத் தருகிரியாதி சரிதையாந், தாகத்தை விட்ட சரிதையோன் றானேசென் றாறு, ளாதித்தன் பத்தியு ளன்புவைத் தேனே. (௯)

யோகச் சமயமே யோகம் பலவுன்னல், யோகவிசேடமே யட்டாங்க யோகமாம், யோகநிர் வாணமே யுற்றல் பிரோதயம், யோகபி டேகமே யொண்சித்தி யுற்றலே. (௰) ஆ. சஅ.

ஞானம்.

ஞானத்தின் மிக்கவறநெறி நாட்டில்லை, ஞானத்தின் மிக்க சமயமு நன்றது, ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்கா வா, ஞானத்தின மிக்கார் நரரினமிக் காரே. (க)

சத்தமுஞ் சத்த மனனுந் தகுமன, முய்த்த வுணர்வு முணர்த்து மகந்தையுஞ், சித்தமென றிம்மூன்றுஞ் சிந்திக்குஞ் செய்கையுஞ், சத்தம கடந்தவர் பெற்றநன மார்க்கமே. (உ)

தன்பா லுலகுந் தனக்கரு ளாவது, மன்பா லெனக்கரு ளாவது மாவன,வென்பாற்கண ஞானமு மெய்துஞ் சிவோகமும, பின்பாலி னேயமும் பெற்றிடுந் தானே (௩)

இருக்குஞ் செம்மி யிடம்பிரம மாகும், வருக்கஞ் சராசர மாகு முலகந, தருக்கிய வாசார மெல்லாந் தருமே, திருக்குமில் ஞானத்தைத் தேர்ந்துணர்ந் தோர்க்கே. (௪)

அறிவு மடக்கமு மன்பு முடனே, பிறியா நகர்மனனும் பேரருளாளன், குறியுங் குணமுங் குரைகழ னீயகா, நெறியறி யார்க்கிது நீர்த்தொளி யாமே. (௫)

ஞானம் விளைந்தெழு கின்றதோர் சிந்தையு, ளேனம விளைந்தெதி ரேகாண் வழிதொறுங், கூனல் மதிமண்ட லத்தெதிர் நீர்கண்டு, ஊனம றுத்துநின் றொண்சுட ராகுமே. (௬)

ஞானிக் குடனகுண ஞானத்தி னான்குமா, மோனிக் கிவையொன்றுங் கூடாமுன மோகித்து,மேனிற்ற லாஞ்சத்தி வித்தை விளைத்திடுந், தானிக் குலத்தோர் சரிதை கிரியையே. (௭)

ஞானத்தின் ஞானாதி நான்குமா ஞானிக்கு, ஞானத்தின் ஞானமே நானென தென்னுமல், ஞானத்தில் யோகமே நாதாந்த நல்லொளி, ஞானக் கிரியையே நன்முத்தி நாடலே. (௮)

நண்ணிய ஞானத்தின் ஞானாதி நண்ணுவோன், புண்ணிய பாவங் கடந்த பிணக்கற்றோன், நண்ணிய தேயம் அதாஞானங் கண்டோன், திண்ணிய சுத்தன் சிவமுத்தன் சித்தனே. ()

ஞானச் சமயமே நாடுந் தனைக்காண்டல், ஞான விசேடமே நாடு பரோதயம், ஞான நிர்வாணமே நன்றறி வானருள், ஞானாபிடேகமே நற்குரு பாதமே. (௰) ஆ௲ ௫௮

சன்மார்க்கம்.

சாற்றுஞ்சன் மார்க்கமாந் தற்சிவ தத்துவத், தோற்றங்களான சுருதிச் சுடர்க்கண்டு, சீற்ற மொழிந்து சிவயோக சித்தராய்க், கூற்றத்தை வென்றார் குறிப்பறிந் தார்களே. (௧)

சைவப் பெருமைத் தனிநா யகனந்தி, யுய்ய வகுத்த குருநெறி யொன்றுண்டு, தெய்வச் சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய, வையத் துள்ளார்க்கு வகுத்துவைத் தானே. (௨)

தெரிசிக்கப் பூசிக்கச் சிந்தனை செய்யப், பரிசிக்கக் கீர்த்திக்கப் பாதுகஞ் சூடக், குருபத்தி செய்யுங் குவலயத் தோர்க்குத், தருமுத்தி சார்பூட்டுஞ் சன்மார்க்கந் தானே. (௩)

தெளிவறி யாதார் சிவனை யறியார், தெளிவறி யாதார் சிவனு மாகார், தெளிவறி யாதார் சிவமாக மாட்டார், தெளிவறி யாதவர் தீரார் பிறப்பே. (௪)

தானவ னாகித் தானைந்தா மலஞ்செற்று, மோனம தாமொழிப் பான்முத்த ராவது, மீனமில் ஞானானு பூதியி லின்பமுந், தானவ னாயுற்ற லானசன் மார்க்கமே (௫)

சன்மார்க்கத் தார்க்கு முகத்தொடு பீடமுஞ், சன்மார்க்கத் தார்க்கு மிடத்தொடு தெய்வமுஞ், சன்மார்க்கத் தார்க்கு வருக்கந் தரிசனம், மெய்ம்மார்க்கத் தார்க்கு மியம்புவன் கேண்மினே. (௬)

சன்மார்க்க சாதனந் தான்ஞான ஞேயமாம், பின்மார்க்க சாதனம் பேதையர்க் காய்நிற்குந், துன்மார்க்கம் விட்ட துரியத் துரிசற்றோர், சன்மார்க்கந் தானவ னாகுஞ்சன் மார்க்கமே. (௭)

சன்மார்க்க மெய்த வருமருஞ் சீடர்க்குப், பின்மார்க்க மூன்றும் பெறவியல் பாமென்று, என்மார்க்கந் தானே சிவனொடு கூடலே, சொன்மார்க்க மென்னச் சுருதிகை கொள்ளுமே. (அ)

அன்னிய பாசமு மாகுங் கருமமு, மூன்னு மலத்தையு மூலப் பகுதியும், பின்னிய ஞானமும் பேதாதி பேதமுந், த ன்னொடுங் கண்டவர் சன்மார்க்கத் தோரே (௯)

பசுபாச நீக்கிப் பதியுடன் கூட்டிக், கசியாத நெஞ்சங் கசியக் கசிவித்துத், தொசியாத வுண்மைச் சொரூபோ தயத்துற், றசைவான தில்லாமை யான சன் மார்க்கமே (க0)

மார்க்கஞ்சன் மார்க்கிகட் கிட்ட வருட்பது, மார்க்கஞ்ச ன் மார்க்கமே யன்றிமற் றொன்றில்லை, மார்க்கஞ்சன் மார்க்க மெனுநெறி வைகாதோர், மார்க்கஞ்சன் மார்க்க மாஞ்சித்த யோகமே (கக) ஆ. கக.

சகமார்க்கம்

சன்மார்க்கந் தானே சகமார்க்க மானது, மன்மார்க்க மாமுத்தி சித்திக்குள் வைப்பதாம், பின்மார்க்க மானது போ தாப் பிறந்திறந், துன்மார்க்க ஞானத் துறுதியு மாமே. (க)

மருவுந் துவாதச மார்க்கமில் லாதார், குருவுஞ் சிவனுஞ் சமயமுங் கூடார், வெருவுந் திருமகள் வீட்டில்லை யாகும், உரு வுங் கிளையு மொருங்கிழப் போரே. (௨)

யோகச் சமாதியி னுள்ளே யகலிடம், யோகச் சமாதியி னுள்ளே யுளரொளி, யோகச் சமாதியி னுள்ளே யுளசத்தி, யோ கச் சமாதி யுகந்தவர் சித்தரே. (௩)

போகமும் யோகமும் யோகியர்க் காகுமால், யோகஞ் சி வரூப முற்றிடு முள்ளத்தோர், போகம் புவியிற் புருடார்த்த சி த்தியத் தாகு மிரண்டு மழியாத யோகிக்கே. (௪)

ஆதார சோதனை யானாடி சுத்திகள், மேதாதி யீரெண் கலாந்த விமலனொளி, போதா லயத்துட் புலன்கர ணம்புந்தி சாதா ரணங்கெட லாஞ்சக மார்க்கமே. (௫)

பிணங்கிநிற் கின்றவை யைந்தையும் பின்னை, யணங்கி யெறிவ னயிர்மன வாளாற், கணம்பதி யென்றுங் கருது மொருவன, வணங்கவல் லானசிந்தை வந்துநின் றானே (௬)

வளங்கனி யொக்கும் வளர்ந்த தார்க்கும், வளங்கனி யொப்பதோர் வாய்மைய னாகு, முளங்கவின் றுள்ள முகத்திருப் பார்க்குப், பழங்கனி தானே பழுத்துநின் றானே. (௭)

ஆ. எக

சற்புத்திரமார்க்கம்

மேவிய சற்புத்திர மார்க்கமே யத்தொழி, றாவிப்ப தாஞ்சக மார்க்கஞ் சகத்தொழி, லாவ திரண்டு மகன்று சகமார்க்கத, சேவியோ டொன்றல் சன்மார்க்கத் தெளிவதே, (௧)

பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திட, லாசற்ற நற்றவம் வாய்மை யழுக்கின்மை, நேசித்திட் டன்னமு நீசுத்தி செய்தன்மற, றாசற்ற சற்புத் திரமார்க்க மாகுமே (௨)

அறுகாற் பறவை யலர்ந்தேர்ந் துழலு, மறுகா நறையனன தாமரை நிலஞ், குறுகா நறுமலர் கொய்வன கண்டுஞ், சிறுகா லறநெறி சேரகி லாரே (௩)

அருங்களை யாவது வவ்வடி நீழற், பெருங்களை யாவது பிஞ்ஞக னாணை, வருங்களை யேதென்ற மனனுயிர்க் கெல்லா மொருங்களை யாயுல கேழிரைத் தானே. (௪)

உயர்ந்தும் பணிந்தும் முகந்துந் தழுவி, வியர்ந்து மரனடிக் கேமுறை செய்யின, பயந்தும் பிறவிப் பயனது வாகும், பயந்து பதிநிலைப் பரன்றுணை யாமே. (௫)

நின்று தொழுவன் கிடந்தெம் பிரான்றன்னை, யென்றுந் தொழுவ னெழிற்பரஞ் சோதியைத், துன்று மலர்தூவித் தொழுமின் றொழுந்தொறுஞ், சென்று வெளிப்படுந் தேவர் பிரானே. (௬)

திருமன்னுஞ் சற்புத்திர மார்க்கச் சரிதை, யுருமன்னி வாழு முலகத்தீர் கேண்மின், கருமன்னு பாசங்கை கூம்பத் தொழுது, விருமன்னு நாடோறு மின்புற் றிருந்தே. (எ) ஆ. அ௩.

தாசமார்க்கம்.

எளியன தீப மிடன்மலர் கொய்த, லளிதின் மெழுக லதுதூர்த்தல் வாழ்த்தல், பளிமணி பற்றல் பன்மஞ் சனமாதி, தளிதொழில் செய்வது தான்றாச மார்க்கமே (௧)

அதுவிது வாதிப் பரமென் றகல்வ, ரிதுவழி யென்றங் கிறைஞ்சின ரில்லை, விதிவழி யேசென்று வேதனை நாடி, மதுவிது நெஞ்சிற் றணிகின்ற வாறே. (௨)

அந்திப்பல திங்க ளதனைப்பின்பு ஞாயிறு, சிந்திப்ப னென்று மொருவன செறிகழல், வந்திப்ப வானவர் தேவனை நாடொறும், வந்திப்ப தெல்லாம் வகையின் முடிந்ததே (௩)

அண்ணலை வானவ ராயிரம பேர்சொல்லி, யுன்னுவ ருள்மகிழ்ந் துன்னின ரடிதொழக், கண்ணவ னென்று கருதுமவர்க் கடகுப, பண்ணவன் பேரன்பு பற்றிநின் றானே. (௪)

வாசித்தும் பூசித்து மாமலர் கொய்திட்டும், பாசிக் குளத்தில்வீழ் கல்லா மனமம்பார்க்கின், மாசற்ற சோதி மணிமிடற் றண்ணலை, நேசத் திருந்த நினைவறி யாரே (௫) ஆ. அ௮

சாலோகம்.

சாலோக மாதி சரிதாதி யிற்பெறுஞ், சாலோக சாமீபந் தக்குஞ் சரியையா, மேலோகஞ் சேரில் வழியர்க்குஞ் சா

ரூபம், பரலோக மில்லாப் பரனுரு வாமே. (க)

சமயங் கிரியையிற் றன்மனங் கோயிற், சமய மனுமுறை தானே விசேடஞ், சமயத்து மூலந் தனைக்கேறன் மூன்றுஞ், சமயாபி டேகமே தானாஞ் சமாதியே. (உ) ஆ. கஎ.

சாமீபம்.

பாசம் பசுவான தாகுமிச் சாலோகம், பாச மருளான தாகுமிச சாமீபம, பாசஞ்சிவமான தாகுமிச் சாரூபம், பாசங் கரைபதி சாயுச் சியமே (க) ஆ. கக.

சாரூபம்.

தங்கிய சாரூபந் தானெட்டாம யோகமாந், தங்குஞ் சன்மார்கந் தனிலன்றி கைகூடா, வங்கத துடல்சித்தி சாதந ராகுவ, ரிங்கிவ ராக விழிவற்ற யோகமே. (க)

சயில லோகத்தினைச் சார்ந்த பொழுதே, சயிலம தாகுஞ் சராசரம் போலப், பயிலுங் குருவின பதிப்புகக போதே, கயிலை யிறைவன் கதிர்வடி வாமே (உ) ஆ. கங.

சாயுச்சியம்.

சைவஞ் சிவனுடன் சம்பந்த மாவது, சைவந் தனையறிந் தேசிவஞ் சாருதற், சைவஞ் சிவந்தனைச் சாராம லீவுதற், சைவஞ் சிவானந்தஞ் சாயுச சியமே. (க)

சாயுச் சியஞ்சாக்கி ராதீதஞ் சாருதல், சாயுச் சியமுபசாந்தத் துதித் தங்குதற், சாயுச் சியஞ்சிவ மாதல் முடிவிலாச், சாயுச் சியமனந் தானந்த சத்தியே. (உ) ஆ. கஓ.

சத்திநிபாதம்-மந்தம்.

இருட்டறை மூலை யிருந்த குமரி, குருட்டுக் கிழவனைக்,

கூடற குறித்ததுக், குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி, மரு
ட்டி யவனை மணம்புரிந் தானே. (௧)

தீம்புல னான திசையது சிந்திக்கி, னாம்புல னாயறி வா
ர்க்கமு தாய்நிற்குந், தேம்புல னான தெளிவறி வார்கட்குக்,
கோம்புல னாடிய கொல்லையு மாமே. (௨)

இருணீக்கி யெண்ணில் பிறவி கடத்தி, யருணீங்கா வண்
ணமே யாதி யருளு, மருணீங்கா வானவர் கோனொடுங் கூடிப்,
பொருணீங்கா வின்பம் புலம்பயில் தானே. (௩)

இருளார்ந்த முறையி லிருந்த நாடிற், பொருள்சூழ் விளக்
கது புக்கெரிந் தாற்போன், மருள்சூழ் மயக்கத்து மாமலர்
நந்தி, யருளது நிறைவது மானையு மாமே. (௪) ஆ௨ ௧௧

மந்திரம்

மருட்டிப் புணர்ந்து மயக்கமு நீக்கி, வெருட்டி வினைபறு
த் தின்பம் விளைத்துக், குருட்டினை நீக்கிக் குணம்பல காட்
டி, யருட்டிகழ ஞான மதுபுரிந் தானே (௧)

கன்னித் துறைபடிந் தாடிய வாடவா, கன்னித் துறை
படிந் தாடுங் கருத்திலா, கன்னித் துறைபடிந் தாடுங் கருத்
துண்டேற், பின்னைப் பிறவிப் பிறிதில்லை தானே (௨)

செய்யன் கரியன் வெளியனற் பச்சைய, னெய்த வுணர்
ந்தவ ரெய்வ ரிறைவனை, மைவென் றகன்ற பகடுரி போர்த்த
வெய, னைய னிவனென்று காதல்செய் வீரோ (௩)

எய்திய காலங்க ளெத்தனை யாயினுந், தையலுந் தானுந்
தனிநா யகமென்பர், வைகலுந் தன்னை வணங்கு மவர்கட்குக்,
கையிற் கருமஞ்செய் காட்டது வாமே. (௪)

கண்டுகொண் டோமிரண் டுந்தொடர்ந் தாங்கொளி, ப
ண்டுபண் டோயும் பரமன் பரஞ்சுடர், வண்டுகொண் டாரீம

லர்வார் சடையண்ணன்,னின்றுகண் டார்க்கிருணீக்கிநின் றானே
ஆக கo௪.

தீவிரம்.

அண்ணிக்கும் பெண்பிள்ளை யப்பனூர் தோட்டத்தி, லெ ண்ணிக்கு மேழேழு பிறவி யுணர்விக்கு, மெண்ணிற்ப தெல்லா மொழிப முதல்வனைக, கண்ணுற்று நின்ற கனியது வாகுமே.

பிறப்பை யறுக்கும் பெருந்தவ நல்கு, மறப்பை யறுக்கு ம் வழிபடை வைக்குங், குறப்பெண் குவிமுலை கோமள வல்லி, சிறப்பொடு பூசனை செய்பநின் றாக்கே. (உ)

தாங்குமி னெட்டுத் திசைக்கு நல்மகன், பூங்கமழ் கோதைப் புரிகுழ லாளொடு, மாங்கது சேரு மறிவுடை யார் கட்குச, தூங்கொளி நீலந் தொடர்தலு மாமே (ங)

ஞானகொழுந் தொன்று நல்குப, பானிலும் பன்மலர் தூவிப பணிவ, னுணுகிய தொன்றறி யாத வொருவ, னுணுகு மூலகெங்கு மாவியு மாமே. (௪) ஆக கo௮.

தீவிரதரம்.

இருவினை நேரொப்பி லின்னருட் சத்தி, குருவென வந்து குணம்பல நீக்கித், தருமெனு ஞானத்தால் றனசெய லற்றால், றிரிமலந் தீர்ந்து சிவனவ னாமே. (க)

இரவும் பகலு மிலாத விடத்தே, குரவஞ் செய்கின்ற கு ழலியை யுன்னி, யரவஞ் செய்யாம லவளுடன் சேரப், பரிவொ ன தில்லாளும் பராபரை தானே. (உ)

மாலை விளக்கு மதியமு ஞாயிறுஞ், சால விளக்குந் தனி ச்சுட ரன்னாளுள் ஞானம் விளக்கிய காதலென் னுள்புகுந், தூலமி விளக்கி யுடனிருந் தானே. (ங) ஆக கக.

புறச்சமய தூஷணம்.

ஆயத்து ணின்ற வறுசம யங்களுங், காயத் துணின்ற கடவுளைக் காண்கிலா, மாயக் குழியில் விழுவர் மனைமக்கள், பாசத்தி லுற்றுப் பதைக்கின்ற வாறே. (௧)

உள்ளத்து ளோதான கரந்தெங்கு நின்றவன், வள்ளற் றலைவன் மலருறை மாதவன், பொள்ளக் குரம்பைப் புகுந்து புறப்படுங், கள்ளத் தலைவன் கருத்தறி யார்களே. (௨)

உள்ளத்து முள்ளன் புறத்துள னென்பவர்க், குள்ளத்து முள்ளன் புறத்துள னெம்மிறை, யுள்ளத்து மில்லை புறத்தில்லை யென்பவர்க், குள்ளத்து மில்லை புறத்தில்லை தானே.()

ஆறு சமயமுங் கண்டவா கண்டில, ராறு சமயப் பொருளும் பயனில்லை, தேறுமின் றேறித் தெளிமின் றெளிந்தபின், மாறுத லின்றி மனைபுக லாமே (௪)

சிவமல்ல தில்லை யறையோ சிவமாந், தவமல்ல தில்லை தலைப்படு வார்க்கிங், கவமல்ல தில்லை யறுசம யங்கள், தவமல்ல நந்திதாட் சார்ந்துய்ய நீரே (௫)

அண்ணலை நாடிய வாறு சமயமும், விண்ணவ ராக மிகவும் விரும்பியே, முண்ணின் றழியு முயன்றில ராதலான், மண்ணின் றொழியும் வகையறி யார்களே. (௬)

சிவகதி யேகதி மற்றுள்ள வெல்லாம், பவகதி பாசப் பிறவியொன் றுண்டு, தவகதி தன்னொடு நேரொன்று தோன்றி, லவகதி மூவரு மவ்வகை யாமே. (௭)

நூறு சமய முளவா நுவலுங்கா, லாறு சமயமவ் வாறுட் படுவன, கூறு சமயங்கள் கொண்ட நெறிநில்லா, நீறு பரனெறி யில்லா நெறியன்றே. (௮)

கத்துங் கழுதைகள் போலுங் கலதிகள், சுத்த சிவனெங்குந் தோய்வுற்று நிற்கின்றான், குற்றந் தெரியார் குணங்கொண்டு கோதாட்டார், பித்தேறி நாளும் பிறந்திறப் பாரே.

மயங்குகின் றாரு மதிதெளிந் தாரு, முயங்கி யிருவினை மு
ழைமுகப் பாச்சி, யியங்கிப் பெறுவரோ வீறது காட்டிற், பயங்
கெட் டவர்க்கோர் பரநெறி யாமே. (௧௦)

சேய னணியனைப் பிணியிலன் பேர்நந்தி, தூயன துளக்கற
நோக்கவல் லார்கட்கு, மாயன் மயக்கிய மானுட ராமவர், கா
யம் விளக்குங் கருத்தறி யாரகளே (௧௧)

வழியிரண் டுக்குமோர் வித்தது வான, பழியது பார்மி
சை வாழ்க லுறுதல், சுழியறி வாளன்றன் சொல்வழி முன்னின்,
றழிவறி வார்நெறி நாடநில் லாரே (௧௨)

மாதவ ரெல்லாமா தேவன் பிரானென்பர், நாதம தாக
வறியப் படுநந்தி, பேதஞ்செய் யாதே பிரானென்று கைதொ
ழி, லாதியு மந்நெறி யாகிநின் றானே. (௧௩)

அரநெறி யப்பனை யாதிப் பிரானை, யுரநெறி யாகி யுளம்பு
குந் தானைப், பரநெறி தேடிய பத்தர்கள் சித்தம், பரனறி யா
விடிற் பல்வகை தூரமே. (௧௪)

பரிசற வானவன் பண்பன் பகவோன், பெரிசறி வானவ
ர் பேற்றிற் றிகழுந், துரிசற நீநினை தூய்மணி வண்ண, னரிதவ
வைத்த வறநெறி தானே (௧௫)

ஆன சமய மதுவிது நன்றெனு, மாய மனிதர் மயக்க ம
துவொழி, கானங் கடந்த கடவுளை நாடுமின், ஞானங் கடந்த
வுருவது வாமே. (௧௬)

அறநெறி நாடிய வமரர் முனிவருஞ், சென்னெறி கண்டா
ர் சிவனெனப் பெற்றார்பின், முன்னெறி நாடி முதல்வ னருளி
லார், சென்னெறி செல்லார் திகைக்கின்ற வாறே. (௧௭)

உறுமா றறிவது முன்னின்ற சோதி, பெறுமா றறியிற் பி
ணக்கொன்று மில்லை, [illegible] வஞ்சிய [illegible]
றுமா றறிகில ரேழைக டாமே. (௧௮)

வழிநடக் கும்பரி சொன்றுண்டு வையங், கழிநடக் குண்டவர் கற்பனை கேட்பர், சுழிநடக் குந்துய ரம்மது நீக்கிப், பழிநடப் பார்க்குப் பரவலு மாமே. (உக)

வழிசென்ற மாதவம் வைகின்ற போது, பழிசெல்லும் வல்வினைப் பற்றறுத் தாங்கே, வழிசெல்லும் வல்வினை யார்திறம் விட்டிட், டெழிசெல்லி லும்பர் தலைவன்முன் னாமே. (உ௨)

ஆ கங௧.

நிராகாரம்.

இமையங்க ளாய்நின்ற தேவர்க ளாறு, சமையங்கள் பெற்றனா சாத்திர மோதி, யமையறிந் தோமென்ப ராதிப்பிரா னுங், சமையறிந் தாருட் கலந்துநின் றானே. (க)

பாங்கமர் கொன்றைப் படர்சடை யானடி, தாங்கு மனிதர் தரணியி னேரொப்பர், நீங்கிய வண்ண நினைவுசெய் யாதவ, ரேங்கி யுலகி லிருந்தழு வாரே. (உ)

இருந்தழு வாரு மியல்புகெட் டாரு, மருந்தவ மேற்கொண் டங்கண் ணடைவெண்ணில், வருந்தா வகைசெய்து வானவர் கோனும், பெருந்தன்மை நல்கும் பிறப்பில்லை தானே. (ங)

தாரதி வாளர் தலைவர் நினைப்பிலர், பாரதி வாணர் பயபயன் றுணிவர், காரதி வாளர் கரந்து பிறப்பார்க, ளீரதி வாளர்கெடு மாறுகி லாமே. (ச)

அறிவுடன் கூடி யழைத்ததோர் தோணி, பறியுடன் பாரம் பழம்பதி சிந்துங், குறியது கண்டுங் கொடுவினை யாளர், செறிய நினைக்கிலர் சேவடி தானே. (ரு)

மன்னு மொருவன் மருவு மனோமய, னென்னின் மனிதரி கழ்வில் வேழைகள், பின்னி மனமே தொழுமின் றலைவனை, தன்னைய மங்கே தலைப்பட லாமே. (சா)

ஓங்காரத் துள்ளொளி யுள்ளே யுதயமுற், றூங்கார மற்ற வருபவங் கைகூடார், சாங்கால முன்னூர் பிறவாமை சார்வு ளூர், நீங்காச் சமயத்து ளின்னெறுழிந் தார்களே. (எ) ஆ. கங அ

உட்சமயம்.

இமையவர் தம்மையு மெம்மையு முன்ன, மமைய வகுத்தவ னாதிப் புராணன, சமையங்க ளாறுந தன்னருளினைகாட், டமையங் குழல்கின்ற வாதிப் பிரானே (க)

ஒன்றது பேரூர் வழியா றதற்குள, வென்றது போல விருமுச சமயமு, நன்றிது தீதிது வென்றுரை யாளர்கள், குன்று குரைத்தெழு நாயையொத் தார்களே. (உ)

சைவப் பெருமைத் தனிநா யகனறனனை, யுய்ய வுயிர்க்கின்ற வொண்சுடர் நந்தியை, மெய்ய பெருமையர்க் கன்பனை யின்பஞ்செய், வையத் தலைவனை வந்தடைந் துய்மினே. (௩)

சிவனவன வைத்ததோர் தெய்வ நெறியிற, பவனவன வைத்த பழவழி நாடி, யிவனவ னென்ப தறியவல் லார்கட், கவனவ னங்குள தாங்கட னாமே (௪)

ஆமா றுரைக்கு மறுசம யாதிக்குப், போமாறு தானில்லை புண்ணிய மல்லதங், காமாம் வழியாக்கு மவ்வே றுயிர்கட்கும், போமாறவ் வாதாரப் பூங்கொடி யாளே. (௫)

அரநெறி யாவ *தறிந்தேனு நானுஞ், சிலநெறி தேடித் திரிந்தவ காளு, முரநெறி யுள்ளக் கடலகடந் தேறுந், தரநெறி நின்ற தனிச்சுடர் தானே. (௬)

நேர்ந்த வரனை யடைந்த சிவநெறி, பேர்ந்தவ ருன்னிப் பெயர்ந்த பெருவழி, யார்ந்தவ ரண்டத்துப் புக்க வருநெறி, போர்த்து புணர்ந்து புணர்நெறி யாமே. (எ)

ஈரு மன்றினை யிரண்டற விசையின், னூருஞ் சகரத்தை யோதுமின் னோதியே, வாரு மரனெறி மன்னியே முன்னியத்,

துருஞ் சுடரொளி தோன்றலு மாமே. (௮)

மினற்குறி யாளனை வேதியர் வேதத், தனற்குறி யாளனை
யாதிப் பிரானரனை, நினைக்குறி யாளனை ஞானக கொழுந்தி,
னயக்குறி காணி லரனெறி யாமே. (௯)

ஆய்ந்துணை ராகளி ஞானமாச் சதிர்பல,வாய்ந்துணை ராவ
கை நின்ற வரனெறி, பாய்ந்துணர் வாரரன சேவடி கைதொ
ழு, தேர்ந்துணர செய்வதோ ரின்பமு மாமே. (௧௦)

சைவச் சமயத் தனிநா யகனந்தி, யுய்ய வகுத்த குருநெறி
யொன்றுண்டு, தெய்வச சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய,
வையத்து ளார்க்கு வகுத்துவைத் தானே. (௧௧)

இத்தவ மத்தவ மென்றிரு பேரிடும், பித்தரைக் காணி னகு
மெங்கள பேர்நந்தி, யெத்தவ மாகிலென னெங்குப் பிறக்கிலெ
ன, னொத்துணர வார்க்கொல்லை யூர்புக லாமே (௧௨)

ஆமே பிரானமுக மைந்தொடு மாருயி, ராமே பிரானுக்க
சோமுக மாறுள, தாமே பிரானுக்குந் தனசிர மாலைக்கு, நா
மே பிரானுக்கு நரரியல் பாமே (௧௩)

ஆதிப் பிரானுல கேழு மளநதவ, னோதக் கடலு முயிர்க
ளு மாய்நிற்கும, பேதிப பிலாமையி னின்ற பராசத்தி, யாதி
க்கட டெய்வமு மநதமு மாமே. (௧௪)

ஆய்ந்தறி வார்க ளமரர் வித்தியாதர, ராய்ந்தறி யாவண
நின்ற வரனெறி, வாய்ந்தறிந் தேனவன சேவடி கைதொழக்,
காய்ந்தறிந் தேனிம்மை யடமைகண் டேனே. (௧௫)

அறியவொன் றாகவ வுடம்பின் பயனை, யறியவொன் றா
த வறுவகை யாக்கி, யறியவொன் றாத வறுவகை கோசத், த
றியவொன் றாநதோ ரண்டம் பதிந்ததே. (௧௬)

ஆ* அதிகாரம் - உ௯ - திருமந்திரம் - ௧௬௪
ஐந்தாந்தந்திர முற்றும்.

ஆ. சிறப்புப்பாயிரமுட்பட - அதிகாரம் - ௧௨௫.
கூடிய திருமந்திரம் - ௧௬௪௨.

ஆறாந்தந்திரம்.

சிவகுருதரிசனம்

பத்திப் பணித்துப் பரவு மடிநல்கிச், சுத்த வுரையாற் றுரிசறச் சோதித்துச், சத்து மசத்துஞ் சதசத்துங் காட்டலாற், சித்த மிறையே சிவகுரு வாமே. (௧)

பாசத்தைக் கூட்டியே கட்டிப் பறித்திட்டு, நேசித்த காயம் விடுவித்து நேநேரே, கூசற்ற முத்தியிற் கூட்டலா னாட்டத்த, தாசற்ற சற்குரு வம்பல மாமே. (௨)

சித்திக ளெட்டொடுந் திண்சிவ மாக்கிய, சுத்தியு மெண்சத்தித் தூய்மையும் யோகத்துச், சத்தியு மந்திர சாதக போதமும், பத்தியு நாத னருளிற் பயிலுமே (௩)

எல்லா வுலகிற்கு மப்பாலோ னிப்பாலாய், நல்லா ருள்ளத்து மிக்கரு ணல்கலா, லெல்லாரு முய்யக்கொண் டிங்கே யளித்தலாற், சொல்லாரு நற்குரு சுத்த சிவமே. (௪)

தேவனுஞ் சுத்த குருவு முபாயத்துள், யாவையு மூனரு வாக்கண் டொயாலே, மூவாப் பசுபாச மாற்றியே முத்திப்பால், யாவையு நல்குங் குருபர னன்புற்றே. (௫)

சுத்த சிவன்குரு வாய்வந்து தூய்மைசெய், தத்தனை நல்குருவ் காணு வகிமூடர், பொய்த்தகு கண்ணு னமரென்பர் புண்ணிய, ரத்த னிவனென் றடிபணி வாரே. (௬)

உண்மையிற் பொய்மை பொழித்தலு முண்மைப்பா, ரின்மையு மொண்மைச் சிவமாய வவ்வரன், வண்மையு மெட்டெட்டுச் சித்தி மயக்கமு, மன்னை யருளறி யாரறி வாரே. (௭)

சிவனே சிவஞானி யாதலாற் சுத்த, சிவனே யெனவடி சேரவல் லார்க்கு, நவமான தத்துவ நன்முத்தி நண்ணும், பவ

மான தின்றிப் பரலோக மாமே. (௮)

குருவே சிவமெனக் கூறின னந்தி, குருவே சிவமென் பது குறித் தோரார், குருவே சிவனுமாய் கோனுமாய் நிற்குங், குருவே யுரையுணர் வற்றதோர் கோவே. (௯)

சித்த மியாவையுஞ் சிந்தித் திருந்திடு, மத்த னுணர்த்துவ தாகு மருளாலே, சித்த மியாவையுந் திண்சிவ மானக்கா, லத்த னுமவிட்டத் தேயமர்ந் தானே (௧௦)

தானந்திச் சீர்மையுட் சந்தித்தச் சீர்வைத்த, கோனந்தி யெந்தை குறிப்பறி வாரில்லை, வானந்தி யென்று மகிழு மொருவர்க்குத், தானந்தி யங்கித் தனிச்சுட ராமே. (௧௧)

திருவாய சித்தியு முத்தியுஞ் சீர்மை, மருவா வருளு மயக் கறும் வாய்மைப், பொருளாய வேதாந்தப் போதமு நாத, னுருவா யருளா விடிலோர வொண்ணாதே. (௧௨)

பத்தியு ஞானவை ராக்கிய மும்பர, சித்திக்கு வித்தாகுஞ் சிவோகமே சோதலான, முத்தியின் ஞான முளைத்தலா லம்முளை, சத்தி யருடரிற் றுன்னெளி தாமே. (௧௩)

இலையெய்த வைத்ததோ ரின்பப் பிறப்பினை, முனையெய்த வைத்த முதல்வனை யெம்மிறை, தன்னையெய்துங் காலத்துத் தானே வெளிப்படு, மனையெய்த வைத்த மனமது தானே. (௧௪)

சிவமான ஞானந் தெளியவொண் சித்தி, சிவமான ஞானந் தெளியவொண் முத்தி, சிவமான ஞானஞ் சிவபரத் தேயேகச், சிவமான ஞானஞ் சிவானந்த நல்குமே. (௧௫)

அறிந்துணர்ந் தேனிவ் வகலிட முற்றுஞ், செறிந்துணர்ந் தோதித் திருவருள் பெற்றேன், மறந்தொழிந் தேன்மதி மாண்டவர் வாழ்க்கைப், பிறிதொழிந் தேனிப் பிறவியை நானே. ()

தரிக்கின்ற பல்லுயிர்க் கெல்லாந் தலைவ, னிருக்கின்ற த

ன்மையை யேது முணரார், பிரிக்கின்ற விந்துப் பிணக்கறுத் தெ
ல்லாங், கருக்கொண்ட வீசனைக் கண்டுகொண் டேனே. (௧௭)

திருவடிப்பேறு.

இசைந்தெழு மன்பி லெழுந்த படியே, பசைந்தெழு மீச
ரைப் பாசத்து ளேகச், சிவந்த குருவந்து சென்னிகை வைக்க,
வுவந்த குருபத முள்ளத் துவந்ததே. (௧)

தாடந்த போதே தலைதந்த வெம்மிறை,*வாடந்த ஞான
வலியையுந் தந்திட்டு, வீடந்த மின்றியே யாளெனை விட்டரு
ட், பாடின் முடிவைத்துப் பார்வந்து தந்ததே. (௨)

தானவ னாகிச் சொரூபத்து வந்திட்டு, வான சொரூபங்க
ளொன்று மகற்றின, வேனைய முத்திரை யீந்தாண்ட வன்னந்தி,
தானடி முற்சூடித் தாபித்த தன்மையே (௩)

உரையற் றுணர்வற் றுயிர்பர மற்றுத், திரையற்ற நீர்
போற் சிவமாத லீர்த்துக், கரையற்ற சத்தாதி நான்குங் க
டந்த, சொரூபத் திருத்தினன் சொல்லிறந் தோமே. (௪)

குரவ னுயிர்முச் சொரூபமுங் கைக்கொண், டரிய பொரு
ண்முத் திரையாகக் கைக்கொண்டு, பெரிய பிரானடி நந்திபேச்
சற்று, வுருகிட வென்னையங் குய்யக்கொண் டானே. (௫)

பேச்சற்ற வின்பத்துப் பேரானந் தத்திலே, மாச்சற்ற
வென்னைச் சிவமாக்கி மாள்வித்துக், காச்சற்ற சோதி கடன்மூ
ன்றுங் கைக்கொண்டு, வாச்ச புகழ்மாளத் தாடந்த மன்றுமே.

இதயத்து நாட்டத்து மென்றன் சிரத்துப், பதிவித்த பர
தம் பராபர நந்தி, கதிவைத்த வாறுமெய் காட்டிய வாறும், வி
திவைத்த வாறும் விளம்பவொண் ணாதே (௭)

திருவடி வைத்தென் சிரத்தரு ணோக்கிப், பெருவடி வைத்
தந்த பேர்நந்தி தன்னைக், குருவடி விற்கண்ட கோனையெங்
கோவைக், கருவழி மாற்றிடக் கண்டுகொண் டேனே (௮)

திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்குந், திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்குந், திருவடி ஞானஞ் சிறைமல மீட்குந், திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே. (௯)

மேல்வைத்த வாறுசெய் யாவிடின் மேல்வினை, மால்வைத்த சிந்தையை மாயம தாக்கிடும், பால்வைத்த சென்னிப் படரொளி வானவன், றாள்வைத்த வாறு தரிப்பித்த வாறே (௧0)

கழலார் கமலத் திருவடி யென்னு, நிழல்சேரப் பெற்றே னெடுமா லறியா, வழல்சேரு மங்கியு ளாதிப பிரானுங், குழல்சேரு மின்னுயிர்க் கூடுங் குலைத்ததே. (௧௧)

முடிமன்ன ராகின்று மூவுலக மாள்வ, ரடிமன்ன ரின்பத் தளவில்லை கேட்கின், முடிமன்ன ராய்நின்ற தேவர்க ளீசன், குடிமன்ன ராய்க்குற்ற மற்றுநின் றாரே. (௧௨)

வைத்தே னடிகள் மனத்தினுள் ளேநான, பொய்த்தே யெரியும் புலன்வழி போகாம, லெய்த்தே யுழலு மிருவினை மாற்றிடு, மெய்த்தே னறிந்தேனவ் வேதத்தி னந்தமே. (௧௩)

அடிசார லாமண்ணல் பாத மிரண்டு, முடிசார வைத்தனர் முன்னை முனிவர், படிசார்ந்த வின்பப் பழவடி வெள்ளங், குடிசார் நெறிகூடி நிற்பவர் கொள்கையே (௧௪)

மந்திர மாவது மாமருந் தாவதுந், தந்திர மாவதுந் தானங்க ளாவதுஞ், சுந்தர மாவதுந் தூயநெறி யாவது, மெந்தை பிரான்ற னிணையடி தானே. (௧௫) ஆ. ௩௨.

ஞாதுருஞானஞேயம்.

நீங்காச் சிவானந்த ஞேயத்தே நின்றிடப், பாங்கான பாசம் படரப் படரினு, மாங்கார நீங்கி யதனிலை நிற்கவே, நீங்கா வமுத நிலைபெற லாமே. (௧)

ஞேயத்தே நின்றோர்க்கு ஞானாதி யின்றிடு, ஞேயத்தின் ஞாதுரு ஞேயத்தில் வீடுறு, ஞேயத்தின் ஞேயத்தை ஞேயத்

ஞை யுற்றவ, ராயத்தி னின்ற வறிவறி வாரே. (௨)

தானென் றவனென் றிரண்டாகுந் தத்துவந், தானென் றவனென் றிரண்டுந் தனிற்கண்டு, தானென்ற பூவை யவனடி சூட்டிரு, ஞானென் றவனென்கை நல்லதொன் றன்றே, (௩)

வைச்சன் வாறுறு மாற்றி யெனைவைத்து, மெச்சப் பரன்றன் வியாப்துவ மேலிட்டு, நிச்சய மாக்கிச் சிவமாக்கி ஞேயத்தா, லச்சங் கெடுத்தெனை யாண்டன னந்தியே (௪)

முன்னை யறிவறி யாதவம் மூடர்போற், பின்னை யறிவறி யாமையைப் பேதித்தான், றன்னை யறியப் பரனாக்கித் தற்சிவத், தென்னை யறிவித்த திருநந்த னந்தியே. (௫)

காணாத கண்ணுடன் கேளாத கேள்வியுங், கோணாத போகமுங் கூடாத கூட்டமு, நாணாத நாணமு நாதாந்த போதமுங், காணா வெனவந்து காட்டின னந்தியே. (௬)

மோனங்கை வந்தோர்க்கு முத்தியுங் கைக்கூடு, மோனங்கை வந்தோர்க்குச் சித்தியு முன்னிற்கு, மோனங்கை வந்தூமை யரமொழி முற்றுங்காண, மோனங்கை வந்தைங் கருமமு முன்னுமே (௭)

முத்திரை மூன்றின முடிந்தது மூன்றின்பால், வைத்த கலைகால் ஞானமடங் கானமாற்றி, யுய்த்தவந் தானந்த தொண்ணூறு பாதத்தே, பெத்த மறுத்தோர் பிறந்திற வாரே. (௮)

மேலைச் சொரூபங்கள் மூன்று மிகுசத்தி, பாலித்த முத்திரை பற்றும் பரஞானி, யாலித்த கட்டமே ஞேயம் புகுந்தற்ற, மூலச் சொரூபன் மொழிஞா துருவனே. (௯) ஆ. சக.

துறவு.

இறப்பும் பிறப்பு மிருமையு நீக்கித், துறந்தவர் தம்பக லாசோதிப் பிரானை, மறப்பில ராய்நித்தம் வாய்மொழி வார்க்

கட், கறப்பதி காட்டு மமரர் பிரானே (௧)

பிறந்து மிறந்தும்பல் பேதமை யாலே, மறந்து மலவிரு ணீங்க மறைந்து, சிறந்த சிவனருட் சேர்பரு வத்துத், துறந்த வுயிர்க்குச் சுடரொளி யாமே. (௨)

அரவன் பிறப்பிலி யாருமி லாதா, னுறைவது காட்டக முண்பது பிச்சை, துறவெனுங் கண்டா துறந்தவர் தம்மைப், பிறவி யறுத்திடும் பித்தனைக் கண்டீரே (௩)

நெறியைப் படைத்தா னெருஞ்சில் படைத்தா, னெறியில் வழுவி னெருஞ்சில்முட் பாயு, நெறியில் வழுவா தியங்கவல் லார்க்கு, நெறியி னெருஞ்சின்முட் பாயகி லாவே. (௪)

கேடுங் கடமையுங் கேட்டுவந் தைவரு, நாடி வளைந்தது நாணகட் டேனவே, னாடல் விடையுடை யண்ணல் திருவடி, கூடுந் தவஞ்செய்த கொள்கையி னானே (௫)

உழவ னுழவுழ வானம் வழங்க, வுழவ னுழவினிற் பூத்த குவளை, யுழவ னுழத்தியர் கண்ணொக்கு மென்றிட், டுழவ னதனை யுழவொழிந் தானே (௬)

மேல்துறந் தண்ணல் விளங்கொளி கூறுவன், நாள்துறந் தார்க்கவ னண்பனல் லாவிலி, கார்துறந் தார்க்கவன் கண்ணுக லாய்நிற்கும், பார்துறந் தார்க்கே பகஞ்செய லாமே ()

காகமு மொன்று படமைந்து நாலது, போகமுட் புற்றிற் பொருந்தி நிறைந்தது, வாக மிரண்டும் படம்விரித் தாட்டொழிந், தேகப் படஞ்செய் துடம்பிட மாமே. (௮)

அகன்றார் வழிமுத லாதிப் பிரானு, மிவனா மெனநின் றெளியனு மல்லன், சிவன்றான் பலபல சீவனு மாகு, நயன்றான் வரும்வழி காமறி யோமே. (௯)

காம்பு திறந்தன வொன்பது வாயதும், மாம்பழ குழலியி ன்னங்கனிப் பட்டது, வேம்பேறி நோக்கினன் மீகமன் கூ

ரையிற், கூம்பேறிக் கோயிலிற் பூக்ினற வாறே. (௬0) ஆடிருக.

தவம்.

ஒடுங்கு நிலைபெற்ற வுத்தம ருள்ள, நடுங்குவ தில்லை நம னுமங் கில்லை, யிடுமையு மில்லை யிராப்பக லில்லை, படுபய னில்லை பற்றுவிட் டோர்க்கே (௧)

எம்மா ருயிரு மிருநிலத் தோற்றமுஞ், செம்மா தவத்தின செயலின பெருமையு, மம்மான திருவருட் பெற்றவர்க கல்லா, திம்மா தவத்தி னியல்பறி யாரே (௨)

பிறப்பறி யாதபல பிசைசெய் மாந்தர், சிறப்பொடு வேண்டிய செல்வம் பெறுவா, மறப்பில ராகிய மாதவஞ் செய்வார், பிறப்பினை நீக்கும் பெருமைபெற் றாரே. (௩)

இருந்து வருந்தி யெழிற்றவஞ் செய்யு, பெருந்தன்மை யாளரைப் பேதிக்க வென்றே, யிருந்திந் திரனே யெவரே வரினு, திருந்துந் தன் சிந்தை சிவனவன் பாலே (௪)

கரந்துங் கரந்திலன் கண்ணுக்குத் தோன்றான், பரந்த சடையன் பசும்பொன்ன னிறத்த, னருந்தவர்க் கல்லா லணுகலு மாகான், விரைந்து தொழப்படு மெண்ணரி யானே. (௫)

இன்னெய்த வைத்ததோ ரின்பப் பிறப்பினை, முன்னெய்த வைத்த முதல்வனை யெம்மிறை, தன்னெய்துங் காலத்துத் தானே வெளிப்படு, மன்னெய்த வைத்த மனமது தானே.(௬)

அமைச்சரு மானைக் குழாமு மரசும், பகைத்தெழும் பூசலுட் பட்டார் நடுவே, யமைத்ததோர் ஞானமு மாத்தமு நோக்கி, யிமைத்தழி யாதிருந் தார்தவத் தாரே. (௭)

சாத்திர மோதுஞ் சதிர்களை விட்டுநீர், மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின, பார்த்தவிப் பார்வையைப் பரத்தணிப் போர், லார்த்த பிறவி யகலவிட் டோடுமே. (௮)

தவம்வேண்டு ஞானந் தலைப்பட வேண்டிற், றவம்வேண்
டா ஞான சமாதிகை கூடிற், றவம்வேண்டா மச்சகசமார்க்
கத்தோர்க்குத், தவம்வேண்டா மாற்றந் தனையறி யாரே (௯)

ஆ- ௬.

தவதூடணம்

ஓதலும் வேண்டா முயிர்க்குயி ருள்ளுற்றார், காதலும் வே
ண்டாமெய்க் காய மிடங்கண்டாற், சாதலும் வேண்டாஞ் ச
மாதிகை கூடினாற், போதலும் வேண்டாம் புலன்வழி போகா
ரக்கே. (க)

கத்தவும் வேண்டாங் கருத்தறிந் தாறினாற், சத்தமும்
வேண்டாஞ் சமாதிகை கூடினாற், சுத்தமும் வேண்டாந் துட
க்கற்று நிற்றலாற், சித்தமும் வேண்டாஞ் செயலற் றிருக்கிலே

விளைவறி வார்பண்டை மெய்த்தவஞ் செய்வார், விளைவ
றி வார்பண்டை மெய்யுரை செய்வார், விளைவறி வார்பண்டை
மெய்யறஞ் செய்வார், விளைவறி வார்விண்ணின் மண்ணின் மி
க்காரே. (௨)

கூடித் தவஞ்செய்து கண்டேன் குரைகழல், தேடித் தவ
ஞ்செய்து கண்டேன் சிவகதி, வாடித் தவஞ்செய்வ தேதவ மி
வைகளந், தாடிற் பலவுல கோரெத் தவரே (௪)

மனத்துறை மாகட லேழுங்கை நீந்தித், தவத்திடை யா
ளர்தஞ் சார்வத் துவந்தார் பவத்திடை யாள ரவாவணி கேட்
டின, முகத்திடை நந்திையை முந்தலு மாமே. (௫)

மனத்திடை நின்ற மதிவா ளுருவி, யினத்திடை நீக்கி யி
ரண்டற வீர்த்துப், புனத்திடை யஞ்சும் போகாமல் மறித்தா
ற், றவத்திடை யாரொளி தன்னொளி யாமே. (௬)

ஒத்த மிகவுநின் றானை யுரைப்பது, பத்தி கொடுக்கும் ப
ணிந்தடி யார்தொழும், முத்தி கொடுக்கு முனிவ னெனும்பதச்,

சத்தான செய்வதுந் தான்றவந் தானே. (௭)

இலைதொட்டுப் பூப்பறித் தெந்தைக்கென் றெண்ணி, மலர்தொட்டுக் கொண்டே வரும்புனல் காணேன, றலைதொட்ட நூற்கண்டு தாழ்ந்ததென னுள்ளந, தலைதொட்டுக் கண்டே னவங்கண்ட வாறே (௮)

பாசடை மாகவும் பத்திய பத்தாச, கிடரடை யாவ்வனை மீச னருளு, மிடரடை செய்தவா மெய்த்தவ நோக்கி, லுடரடை செயவ தொருமனத் தாமே (௯)

ஆற்றிற கிடந்த முசலைக்கண் டஞ்சிப்போ, யீற்றுக் கரடிக் கெதிரப்பட்ட தன்னொக்கு, நோற்றுந் தவஞ்செய்யா தாலறிவாகவா, சோற்றுக்கு நின்று சுழல்கின்ற வாறே (௧௦)

பழுக்கின்ற வாறும் பழமுண்ணு மாறுங், குழக்கன்று துள்ளியக் கோணியைப் புல்கா, றழக்கன்று கொட்டிலிற் கட்டவல் லார்க்குள, விழுக்காது செஞ்சத் திடவொன்று மாமே (௧௧)

சித்தஞ் சிவமாகச் செய்தவம் வேண்டாவா, றத்தரு சிவானந்தஞ் சேர்ந்தோ ருறவுண்டா, றித்தரு சிவமாக வேசித்தி முத்தியாரு, சித்தஞ் சிவமாதல் செய்தவப் பேறே ()

(௧௨) ஆ ௭௨

அருளுடைமையின ஞானம்வருதல்

பிரானரு ளுண்டெனி லுண்டுநற் செல்வம், பிரானரு ளுண்டெனி லுண்டுநன் ஞானம், பிரானரு ளிற்பெருந் தன்மைபு முண்டு, பிரானரு ளாற்பெருந் தெய்வமு மாமே (௧)

தமிழ்மண் டலமைந்துந் தாவிய ஞான, முமிழ்வது போல வுலகந் திரிவா, ரவிழு மனமுமெம் மாதி யறிவுந், தமிழ்மண் டலமைந்துந் தத்துவ மாமே. (௨)

புண்ணிய பாவ மிரண்டுள பூமியி, னெண்ணும் பொழுதி லாசில ஞானிக, ளெண்ணி யிரண்டையும் வேரறுத் தப்புறந், தண்ணெ னிருப்பிட மாயந்துகொள் விரோ. (௩)

முன்னின் றருளு முடிகின்ற காலத்து, நன்னின் றுலகி னடுவிய தாய்நிற்கும், பின்னின் றருளும் பிறவியை நீக்கிடு, முன்னவ னெங்கட்கொரு முத்திதந் தானே (௪)

சிவனரு ளாற்சிலர் தேவரு மாவர், சிவனரு ளாற்சிலர் தெய்வத்தோ டொப்பர், சிவனரு ளால்வினை சேர்கிலா மைம், சிவனருட் கூறிடச் சிவலோக மாமே (௫)

புண்ணிய னெந்தை புனித னிணையடி, நண்ணி விளக்கெ, னு ஞானம் விளைந்தது, மண்ணவ ராவது மானவ ராவது மண்ணி யிறைவ னருட்பெற்ற போதே (௬)

காலத்தே றி மனப்பாகன் கைக்கூட்ட, மாயத்தே றி மயங்கு மவையுணா, நேயத்தே றி நிமல னருட்பெற்று, லாயத்தே றி யவனிவ னாமே (௭)

அவ்வுல கத்தே பிறக்கி லுடலொடு, மவ்வுல கத்தே யருந்தவ நாடுவ, ரவ்வுல கத்தே யரனடி கூடுவ, ரவ்வுல கத்தே யருள்பெறு வாரே (௮)

சத்திகண்ட காட்டங் கனலின் வடிவா, மத்திகண்ட காந்த மணிநீ வடிவாகு, சத்திகொண்ட சாக்கி யெரியின் வடிவா, மெரிகொண்ட வீச னெழில்வடி வாமே (௯)

நாடு முறவுங் கலந்தெங்க ணந்தியைத், தேடுவன் றேடிச் சிவபெரு மானென்று, கூடுவன் கூடிக் குரைகழற் கேசெல, வீடு மளவும் விடுகின்றி லேனே. (௧௦) ஆக ௮௨

அவவேடம்.

ஆடம் பரங்கொண் டடிசிலுண் பான்பயன், வேடங்கள்

கொண்டு வெருட்டிடும் பேதைகா, ளாடியும் பாடியு மழுது மர ற்றியுந், தேடியுங் காணீர் சிவனவன் றாள்களே (௪)

ஞான மிலாரவேடம் பூண்டிந்த நாட்டிடை, யீன மதே செய் திரந்துண் டிருப்பினு, மான நலங்கெடு மப்புவி யாதலா, லீனவர் வேடங் கழிப்பித்த லின்பமே (௫)

இன்பமுந் துன்பமு நாட்டா ரிடத்துள, நன்செயல் புன் செயலாலந்த நாட்டிற்கா, மென்ப விறைநாடி நாடொறு நா டிடின், மன்பதை செப்பஞ் செயில்வையம் வாழுமே, (௬)

இழிகுலத் தோர்வேடம் பூண்பரே லெய்த, வழிகுலத் தோர்வேடம் பூண்பரே லாகும், பழிகுலத் தாகிய பாழ்ச ண்ட ராளர், கழிகுலத் தோர்கள் களையப்பட் டோரே (௭)

பொய்த்தவஞ் செய்வார் புகுவார் நரகத்துப், பொய்த்த வஞ் செய்தவர் புண்ணிய ராகாரே, பொய்த்தவ மெய்த்தவ மபோகத்துட் போக்கியஞ், சத்திய ஞானத்தா றைங்குந் தவ ங்களே (௮)

பொய்வேடம் பூண்பர் பொசித்தற் பயனா, மெய்வேட ம் பூண்போர் மிகுமிச்சை கைக்கொள்வர், பொய்வேட மெய் வேடம் போதவே பூண்டினு, முய்வேட மாகு முணர்ந்தறிந் தோ ர்க்கே (௯) ஆ. ௮௮

தவவேடம்

தவமிக கவரே தலையான வேட, ரவமிக கவரே யதிகொ லை வேட, நவமிக கவர்வேடத் தாகாரவ வேடந், தவமிக்கவ ர்க்கன்றித் தாங்கவொண் ணாதே (௧)

பூதி யணிவது சாதக மாதியிற், காதணி தாம்பிரக் குண் டலங் கண்டிகை, யோதி யவர்க்கு முருத்திர சாதனந், தீதில சிவயோகி சாதனந் தேரிலே. (௨)

யோகிக் கிடுமது வுட்கட்டு கஞ்சுளி, கோணைக்குப் பாசத்துச் சுற்றுஞ் சடையதொன், றாகத்த நீறணி யாவகைக் கப்பாலாஞ், சீகத்த மாத்திரை திண்பிரம பாகுமே (௫)

காதணி குண்டலங் கண்டிகை நாதமு, மூதுநற் சங்கு முயர்கட்டிக் கப்பரை, யேதமில் பாதுகை யோகாசன மாதன, மேதமி லியோகப் படந்தண்ட மீனாகதே (௬) ஆ ௧௨.

திருநீறு

நூலுஞ் சிகையு முணராரறின மூடர்கள், நூலது வேதாந்த நுண்சிகை ஞானமாம், பாலொன்று மந்தண பார்ப்பார் பரமுயிர், ரோரொன்ற நிற்கடின் லோங்கார மோதிலே (௧)

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை, மங்காமற் பூச மகிழ்வரே யாமாகிற், றங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி, சிங்கார மான திருவடி சேர்வரே (௨)

அரசுட னாலத்தி யாகுமக் காரம், விரவு கனலில் வியனுரு மாறி, நிரவய னின்மல னுளபெற்ற நீதர், ருருவம் பிரம னுயர்குல மாமே (௩) ஆ ௧௫.

ஞானவேடம்

ஞான மிலார்வேடம் பூண்டு நரகத்தர், ஞான முள்ளோர் வேட மின்றெனி னன்முத்தர், ஞான முளதாக வேண்டுவோர் நக்கன்பால், ஞான முள்வேட நண்ணிநிற் பாரே. (௧)

புன்ஞானத் தோர்வேடம் பூண்டும் பயனில்லை, நன்ஞானத் தோர்வேடம பூண்டு மருணண்ணித், துன்ஞானத் தோர்சம யத்துரி சுள்ளோர், பின்ஞானத் தோரொன்றும் பேசகில் லாரே. (௨)

சிவஞானி கட்குஞ் சிவயோகி கட்கு, மவமான சாதக மார்க்கத்து நேரி, லவமா மவாக்கது சாதக மாகு, முவமான மில்பொரு ளுள்ளுற லாமே (௩)

கத்துந் திரிவர் கழுவடி நாய்போற், கொத்தித் திரிவர் குருக்களின் ஞானிகள், ஒத்துப் பொறியு முடலு மிருக்கவே செத்துத் திரிவர் சிவஞானி யோர்களே (௪)

அடியா ரவரே யடியா ரலாதா, ரடியாரு மாகார வவேடமு மாகா, ரடியார் சிவஞான மானது பெற்றோ, ரடியா ரலாதா ரடியார்க ளன்றே (௫)

ஞானிக்குச் சுந்தர வேடமு நல்லவாந், தானுற்ற வேடமுந் தற்சிவ யோகமே, யானவவ் வேட மருண்ஞான சாதந், மானது மாமொன்று மாகா தவனுக்கே (௬)

ஞானத்தி னொப்பக நண்ணுஞ் சிவஞானி, தானத்தி லவைத்த தனியா லயத்தனாய், மோனத்த னாகலின் முத்தனாஞ் சித்தனாம், மோனத் தவசி யிவனென லாகுமே. (௭)

தானனறித தனமையுந தானவ னாதலும், மோனய வசிவ மான வியறகையுந, தானுறு சாதக முததிரை சாததலு, மோனமு நதி பதமுததி பெறறதே (௮) ஆக ௧௦௩

சிவவேடம்

அருளா லரனுக் கடிமைய தாகிப், பொருளாந் தனதுடற் பொற்பதி நாடி, யிருளான தின்றி யிருஞ்செய லற்றோர், தெருளா மடிமைச் சிவவேடத் தாரே. (௧)

உடலிற் றுவக்கிய வேடமுயிர்க் காகா, வுடல்கழ னாறல் வேட முடனே கழலு, முடலுயி ருண்மையென் றோர்ந்துகொள் ளாதார், கடலி லகப்பட்ட கட்டையொத் தாரே. (௨)

மயலற் றிருளற்று மாமன மற்றுக், கயலுற்ற கண்ணியர் கைப்பிணக் கற்றுத், தயலற றவரோடுந் தாமேதா மாகிச், செய லற றிருந்தார் சிவவேடத் தாரே (௩)

ஓடுங குதிரைக் குசைத்திணணம் பற்றுமின, வேடங்கொண டென்செயவீர் வேணடா மனிதரே, நாடுமி னநதியை நமபெ ருமானறனனைத், தேடுமின பபொருள சென்றெயத லாமே (௪) ஆ ௧௦௭

அபக்குவன.

குருட்டினை நீக்குங குருவினைக் கொள்ளார், குருட்டினை நீககாக குருவினைக கொளவா, குருடுங குருடுங குருட்டாட்ட மாடிக், குருடுங குருடுங குழிவிழு மாறே (௧)

மனத்தி லெழுந்ததோர் மாயககண ணாடி, நினைப்பி னத லி லிழலையுங காணார், வினைப்பயன போக விளக்கியுங கொள ளார், புரக்கடை யிச்சித்துப போகின்ற வாறே (௨)

ஏயெனி லென்னென்ன மாட்டார் பிரசைகள, வாய்முலை பெய்ய மதுரநின றூறிடுந, தாய்முலை யாவ தறியா தமருளோர், ரூனிலை செய்யு முருவிலி தானே (௩)

வாயொன்று சொல்ல மனமொன்று சிந்திக்க, நீயொன்று செய்ய வுறுதி நெருநற்காய், தீயென்றிங் குன்னைத் தெளியவன றெளிந்தபின, பேயென்றிங் கென்னைப பிராதெளி யாரோ (௪)

பஞ்சத் துரோகத்துப பாதகர் தம்மை, பஞ்சச் சமயத்தோர் வேந்த னருந்தண்டம, விஞ்சச் செய்திப் புவிவேறே விடாவிடிற், பஞ்சத்து ளாய்ப்புவி முற்றும்பா ழாகுமே (௫)

தவத்திடை நின்றவர் தாமுண்ணுங் கன்மஞ், சிவத்திடை நின்றது தேவ ரறியார், தவத்திடை நின்றறி யாதவ ரெல்லாம், பவத்திடை நின்றதோர் பாடது வாமே. (௬)

கன்றலுங் கருதலுங் கருமஞ் செய்தலுந், தின்றலுஞ் சுவைத்தலுந் தீமை செய்தலும், பின்றலும் பிறங்கலும் பெருமை கூறலு, மென்றிவை யிறைபா லியற்கை யல்லவே. (எ)

வெடிவ தறியார் வெளிகாண மாட்டார், வெடியில வெளியில் விழிக்கவு மாட்டார், கடியதோ ருண்ணிமை கட்டுயின் காணமின், விடியாமை காக்கும் விளக்கது வாமே (அ)

வைத்த பசுபாச மாற்று நெறிவைகிப், பெத்த மறமுத்த ருகிப் பிறழ்வுற்றுத், தத்துவ முனனித் தலைப்படா தவவாறு, பித்தான சீடனுக் கீயப் பெறுதானே (௯)

மனனு மலமைந்து மாறும் வகைபோரான, றுனனிய காமாதி நோயுந் தொழினீங்கான, பினனிய பொய்யன பிரப பிரபஞ்சாதா, னனனிய ருவ னசாசீட ருமே (௧0)

ஆ௳ ககஎ

பக்குவன்.

தொழிலறி வாளர் சுருதிகண் ணுகைப், பழுதறி யாத பரம குருவை, வழியறி வார்நல் வழியறி வாளர், ரழிவறி வாமறை யல்லா தவரே (௧)

பசைந்து தொழுந் தேன்பர மாவுன்னை நாடி, யசைந்து தொழுந் தேனினி யாருடன் கூட்டேன், சிசைந்தடி யேனவினை சிந்தனை தீர, வசைந்துதனை யாயுக்க தாண்டரு ளாயே (௨)

பசைக்கின்ற போதே பரமெனனும் வித்தை, விதைக்கின்ற வித்தினை மேவினறு நோக்கிச், சிதைக்கின்ற சிந்தையைச் செவ்வே நிறுத்தி, யிசைக்கின்ற வன்பருக் கீயலு மாமே. (௩)

கொள்ளினு நல்ல குருவினைக் கொள்ளுக, வுள்ள பொருளு டலாவி யுடனீக, வெள்ளத் தனையு மிடைவிடா தேநின்று, தெ

எளிபதிபச் சிவபதந் தானே. (௪)

சோதி விசாகந் தொடர்ந்திரு தேள்நண்டு, வோதிய நா
ளேயுணர் வது தானென்று, நீதியு ணீர்மை நினைந்தவாக் கல்ல
து, வாதியு மேது மறிடகி லானே. (௫)

தொழிலார மாமணித் தூய்தான சிந்தை, பெழிலா லிறை
வ னிடங்கொண்ட போதே, விழலா விறலாம வினையது போ
கக், கழலார் திருவடி கண்டரு ளாமே. (௬)

சாத்திக ஞானபர தத்துவங் காணுன்னி, யாத்திக பேத
நெறிதோற்ற மாகியே, யார்த்த பிறவியி னஞ்சி யறநெறி, சா
த்தவல் லானவன சற்சீட னாமே. (௭)

சத்து மசத்துமெவ் வாறெனத் தானுன்னிச் சித்தையுந்
தகிச சிவனருட் கைகாட்டப், பத்தியின ஞானம பெறப்பணிந்
தானந்தச, சத்தியி லிச்சைத் தகுவோன சற்சீடனே (௮)

அடிவைத் தருளுதி யாசானின் றுன்று, வடிவைத்த மா
முடி மாயப் பிறவி, யடிவைத்த காய வருட்சத்தி யாலே, யடி
பெற்ற ஞானத் தருச்சற் றுளோனே (௯)

சீராரு ஞானத்தி னிச்சை செலச்செல்ல, வாராத காசற்
குருபரன பாலாகச், சாராத சாதக நான்குந்தன பாலுற்றே,
ரோராயு ஞானத்த ருமடி வைக்கவே (௰)

உணர்த்து மதிபக் குவர்க்கே யுணர்த்தி, யிணக்கிற் பராப
ரத் தெல்லையு ளிட்டுக், குணக்கொடு தெற்குத் தரபச்சி மங்
கொண்டு, வுணர்த்துமின் னுவுடை யானறன்னை யுணர்வியே ( )

இறையடி தாழ்ந்தை வணக்கமு மெய்திக், குறையறு கூ
றிக் குணங்கொண்டு போற்றச், சிறையுட னீயறக் காட்டிச் சிவ
த்தோ, டறிவுக் கறிவிப்போன் சன்மார்க்கி யாமே. (௰௨)

வேட்கை விடுநெறி வேதாந்த மாதலால், வாழ்க்கைப் பு

லனவழி மாற்றிச்சித் தாக்கத்து, வேட்கை விடுமிக்க வேதா
நதி பாதமே, தாழ்கக்கு தலையிலேன் சற்சிட ஞமே. (௧௩)

சற்குணம வாய்மை தயாவிவே கந்தன்மை,சற்குரு பாத
மே சாபைபோ லீவகாமே, சிறபர ஞானந் தெளியத் தெளி
வோரத, லற்புத மேதோனற லாகுஞ்சற் சீடனே. (௧௪)

ஆ அதிகாரம ௧௪-இ திருமந்திரம-௩௩௧
ஆறுந்தந்திர முற்றும்.

ஆ சிறப்புப்பாயிர முடபட-அதிகாரம் ௬௨௧-இ
கூடிய திருமந்திரம-௧௭௦௩.

ஏழாநதந்திரம்.

ஆறுதாரம்

நாலுமிருமூன்று மீரைந்து மீராறுங், கோலிமே லினற
குறிகள் பதினாறு, மூலங்கண் டாங்கே முடிந்து முதல்ரண்டு
ங, காலங்கண் டானடி காணலு மாமே. (௧)

ஈராறு நாதத்தி லீரெட்டா மந்தத்தின,மேதாதி நாதாந்
த மீதாம பராசத்தி, போதா லயத்தவி காரந் தனிறபோர்,
